**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 59 of 2020

Depositions of PW -5 witness for ________ — Prosecution / Defence / Court

Name : சுந்தர்ராஜ்

Father's Name : வேலுச்சாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of November** 2025.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை பாப்பம்பட்டி பள்ளப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு லேத் ஒர்க் ஷாப் வைத்துள்ளேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 12.11.2019 ம் தேதி மாலை சுமார் 03.00 மணி அளவில் நான் வேலையாக சென்று கொண்டிருந்த பொழுது KNT லாரி ஆபீஸ் முன்பாக போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். நான் என்னவென்று சென்று பார்க்கும் பொழுது போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. உதவி ஆய்வாளர் சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரணை மேற்கொண்டாரா என்றால் விசாரணை மேற்கொண்டார். 12.11.2019 தேதி என்று என்னை உதவி ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டார். என்னை விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளரின் பெயர் எனக்கு தெரியாது. பார்வை மகசர் மற்றும் என்னை விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர்

வெவ்வேறு நபர்கள் அல்ல, ஒரே நபர்தான் பார்வை மகசர் தயார் செய்தார். என்னையும் விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார். என்னை சாட்சியாக இருக்கும்படி எழுத்து மூலமாக எழுதி கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

2. அன்றைய தினம் என்னிடம் மட்டும் கையொப்பம் வாங்கினார்களா அல்லது வேறு யாரேனும் கையொப்பம் செய்தார்களா என்றால் மகேஸ்வரன் என்பவரும் கையொப்பம் செய்தார். அன்றைய தினம் எதற்காக மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் வண்டி திருடு போனது சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.05 18:56:04 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**